நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியை விட

# கூடுதல் தகுதி இருப்பதால் வேலை தர முடியாது!

## ஐகோர்ட்டு உத்தரவு!!

சென்னை, ஜூலை. 11–

நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியைவிட கூடுதல் தகுதி யுடையவர், தனக்கு பணிவ ழங்கும்படி உரிமைகோரமுடி யாது என சென்னை உயர்நீதிமன்றம் தெரிவித்துள் ளது. சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் ரெயில் ஓட் டுனர் பணிக்கு விண்ணப்பங்களை வர வேற்று 2013ல் அறிவிப்பு வெளியிட்டது. இப்பணிக்கு அடிப்படை கல்வி தகுதியாக டிப்ளமோ படிப்பு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இதில் விண்ணப்பித்து தேர் வான ஆர்.லஷ்மிபிரபா என்ப வர், நிர்ணயிக்கப்பட்ட கல் வித்தகுதியை விட அதிக தகுதியாக பி.இ. படிப்பை முடித்திருந்ததால் தேர்வுநடை முறையிலிருந்து அவரை விலக்குவதாக 2013 ஜூலை 31ம் தேதி மெட்ரோ ரெயில் நிர்வாகம் உத்தரவிட்டது.

இந்த முடிவை எதிர்த்து லஷ்மிபிரபா, சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கை நீதிபதி எஸ். வைத் தியநாதன் விசாரித்தார். அப் போது, வேலையில்லா திண் டாட்டம் அதிகரித்துள்ள தமிழகத்தில், மெட்ரோ ரெயில் நிர்வாகத்தின் செயல் பாடு மனுதாரரின் உரிமையை பறிக்கும் வகையில் இருப்ப தாக மனுதாரர் தரப்பில் வாதி டப்பட்டது.

தேர்வு அறிவிப்பிலேயே கூடுதல்கல்வித்தகுதி உடைய வர் பணிநியமிக்கப்பட்டாலும் நீக்கப்படுவார் எனத் தெரிவித் துள்ளதாக மெட்ரோ ரெயில் நிர்வாகம் தரப்பில் தெரிவிக் கப்பட்டது.

இதை ஏற்றுக் கொண்டு மனுவைதள்ளுபடி செய்தநீதி பதி, வேலையில்லா திண் டாட்டம் அதிகரித்துள்ளதை மறுப்பதற்கில்லை. என்றா லும், கூடுதல்தகுதியுடையவர் பணி நியமனம் கோர உரிமை யில்லை என தெரிவித்துள் ளார்.